# ASHOK LEYLAND EMPLOYEES' UNION

# RULES & REGULATIONS

பகுதி — 9

# சங்கத்தின் விதிகளும் ஒழுங்கு முறைகளும்

(தமிழ்)

# அசோக் லேலண்டு தொழிலாளர் சங்கம்

பதிவு எண். 2286

(1977 டிசம்பர் 9ம் தேதி முடிய திருத்தப்பட்டது)

## சங்கத்தின் விதிகளும், ஒழுங்கு முறைகளும்

1. சங்கத்தின் பெயர் "அசோக் லேலண்டு தொழிலாளர் சங்கம், சென்னை".

2 சங்கத்தின் நோக்கங்கள் :

(அ) சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும், தொழிற்சாலை நிர்வாகத்திற்குமிடையே உள்ள உறவை ஒழுங்குபடுத்துதல்.

(ஆ) அங்கத்தினர்களுக்கு சட்ட பூர்வ முறையில் உதவி செய்தல்

(இ) அங்கத்தினர்களுக்கு நல்லதொரு வாழ்கை, வேலை நிலையை அளிப்பது.

(ஈ) அங்கத்தினர்களுடைய குறைகளை போக்குவது.

(உ) அங்கத்தினர்கள் உடல் நலமின்றியும், வயதாகியும், வேலையில்லாமலும் உள்ள நேரங்களிலும மற்றும காலமடையும் போதும் அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்தல்.

(ஊ) அங்கத்தினர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்படும் தகராறுகளை தீர்த்து வைக்க முயற்சிப்பது.

(எ) அங்கத்தினர்கள் மற்றும் நிர்வாகத்தின் சமூக, அரசியல் நிலையை உயர்த்துவது

(ஏ) மேலே குறிப்பிட்ட நோக்கங்களை ஒத்த நோக்கங்கள் உடைய அமைப்புகளுடன் இணைத்தோ; ஒத்துழைத்தோ செயல் படுதல்.

**3.** எந்த ஒரு தொழிலாளி அசோக் லேலண்டு லிமிடெட்டில் பணியாற்றுகிறாரோ, அவருக்கு 18 வயதும் அதற்கு மேலும் இருந்தால் அவர் இச் சங்கத்தின் அன்றாட நடைமுறைக்குள்ள சங்கத்தின் சட்ட திட்டங்கள், விதி முறைகளின்படி நடந்துகொள்ள சம்மதித்தால் அவர் இச் சங்கத்தில் அங்கத்தினராகலாம்

ஒரு தொழிலாளி வேறு ஒரு எதிரான சங்கத்தில் அங்கத்தினராக இருக்கும்பட்சத்தில் அவர் அந்த போட்டி சங்கத்திலிருந்து விலகி வந்தால் மட்டுமேயன்றி, நிர்வாக செயற்குழு அங்கத்தினர்களின் ஒப்புதலோடு அசோக் லேலண்ட் எம்பிளாயீஸ் யூனியன் அங்கத்தினராக சேரமுடியும்.

இச் சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒரு தொழிலாளி வேறு ஒரு எதிரான சங்கத்தில் அங்கத்தினராக சேர்ந்தால், அவர் இச் சங்கத்திலிருந்து விலகியவராவார்.

4 இந்த தொழிற்சாலையில் வேலை செய்யாத அல்லது சம்பந்தப்படாத ஒருவர் கௌரவ அங்கத்தினராக சங்கத்தின் நிர்வாகக் குழுவிற்கு பணியாற்ற அனுமதிக்கப்படலாம் ஆனால் அவ்வாறு கௌரவ அங்கத்தினராக சேரும் அங்கத்தினர்களின் எண்ணிக்கை எந்த ஒரு காரணத்தையொட்டியும் சங்கத்தின் நிர்வாகக்குழுவில் உள்ள மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் பாதிக்கு மேல (50%) இருக்கக்கூடாது.

5 ஒவ்வொரு அங்கத்தினரும் மாத சந்தாவாக ரூ. 2/- செலுத்த வேண்டும். எந்த ஒரு அங்கத்தினர் தொடர்ந்து 3 மாதங்கள் சந்தா செலுத்தாமல் இருக்கிறாரோ அவர் சங்கத்திலிருந்து நீங்கியவராவர். அந்த நாளிலிருந்து அவர் எநத ஒரு சலுகையும், நன்மையும் சங்கத்திலிருந்து பெற தகுதியற்றவராவார் அவர் அப்படி செலுத்தாத, மொத்த சந்தா தொகையைச் சேர்த்து செலுத்தும் பட்சத்தில் அவரை அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள நிர்வாகக்குழு அங்கீகாரம் அளிக்கலாம்.

6 சங்கத்தின் அவ்வப்பொழுதுள்ள நிதி நிலைக்கு ஏற்ப அங்கத்தினர்களுக்கு சலுகைகள அளிக்கப்படுவது நிர்வாகக் குழுவினால் முடிவு செய்யப்படும். எந்த ஒரு அங்கத்தினர் தொடர்ந்து 6 மாதங்கள் சங்க உறுப்பினராக உள்ளாரோ, சந்தா பாக்கி இன்றி செலுத்தி இருக்கிறாரோ அவர்தான் எந்த ஒரு சலுகையும பெற தகுதியுடையவராவார்

7. (அ) சங்கத்தின் பொது உறுப்பினர் யாரேனும் சங்கத்தின் நலன்களுக்கு எதிராக இயங்கினால், அதுபற்றி அவருக்கு தெரிவித்து அவருடைய பதிலைப் பெற்று சங்கத்திலிருந்து நீக்குவதோ அதற்கு தகுந்த தண்டனையோ விதிக்கப்படும. நிர்வாகக் குழு ஒரு தீர்மானம நிறைவேற்றி அதன் மூலம் அந்த அங்கத்தினரின் மேரில நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அந்த அங்கத்தினர் பொதுக்குழுவில் தன்னுடைய நிலையை மேலமுறையீடு செய்யலாம்.

(ஆ) தலைவர் பிற சங்க நிர்வாகிகள் ஆகியோரை நம்பிக்கையில்லா தீர்மானத்தின்படி அவரது பதவியிலிருந்து விலக்கமொத்த அங்கத்தினர்களில் குறைந்தபட்சம் 3ல் ஒருபங்கு அங்கத்தினர்கள் கையொப்பமிட்டு தலைவரிடம கொடுக்கவேண்டும் நம்பிக்கையில்லாதீர்மானம் பொது குழுவிற்குக கொண்டுவருவதற்கு 20 நாட்களுக்கு முன்னரே பொதுக் குழு நிகழ்ச்சிப் பொருளோடு ஒரு அறிவிப்பு அறிகை வெளியிடப்பட வேண்டும். பொதுசகுழுவில் நம்பிக்கயில்லா தீர்மானம், ரகசிய வாக கெடுப்பின்படி, அதிகப்படியான வாக்குகளின் அடிபடையில் முடி வெடுக்கப்படும். நிர்வாகக் குழுவில் உள்ள எந்த ஒரு அங்கத்தினர் பேரில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட இருக்கின்றதோ, அவர் எந்த பகுதி தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கபபடடாரோ அப்பகுதி தொழிலாளர்களில் பாதிககு மேறபட்டவர்களால் நமபிக்கை யில்லா தீர்மானத்தில் கையொப்ப மிடபபடவேண்டும். அந்த நம்பிக் கையில்லா தீர்மானம் அபபகுதி தொழிலாளாகளிடையே ரகசிய வாக்கெடுப்பின் மூலம் அதிகப்படியான வாக்குகளின் அடிப்படையில் நிச்சயிக்கப்படும் எந்த ஒரு அங்கத்தினர் சந்தா பாக்கி இல்லாமல் இருக்கிருரோ அவர்தான் நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்

8. அசோக் லேலண்டில் பணியாற்றுகின்ற சங்க உறுப்பினர் யாரும் நிர்வாகத்திற்கு வேலை நிறுத்த நோக்கத்தை தெரிவித்து ஆறு வார கால அல்லது குறைந்த பட்சம் பதினைந்து நாட்கள் அறிவிப்பு கொடுத்து பின்னர்தான் வேலை நிறுத்தம் செய்யலாம். தொழிற்சாலை யில் வேலை செய்யும் மூன்றுக்கு இரண்டு பங்கு சங்க அறுபபினர்கள் வாக்கெடுப்பின் வாயிலாக வேலை நிறுத்ததில் ஈடுபட முடிவு செய்தால் ஒழிய எந்த ஒரு தனிப்பட்ட அங்கததினரும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட நிர்வாகத்திற்கு அறிவிப்பு அறிவிக்கை அளிக்க முடியாது.

9 எந்த ஒரு அங்கத்தினரும், சங்கத்தின் அனுமதியின்றி வேலை நிறுத்தத்தில ஈடுபட்டால், அவருக்கு சங்கத்திலிருந்து எந்த வித உதவியும கிடைக்காது அது அத்தோடு அவர் மேல் சங்க விதி 7-ன் கீழ் அபராதமும் விதிக்கப்படும்

10 சங்க அலுவல் பொறுப்பில் உள்ள நிர்வாகிகளால் சங்க அங்கத்தினர்களின் பெயர் பட்டியல், வரவு செலவு கணக்கு புத்தகங்கள். மற்றும் சங்கத்திற்கு தேவையான பதிவேடுகள் நிாவகிக்கப்பட்டுவரும், அது சங்க அலுவலகத்தில் வைக்கப்படும். அவற்றை மாலை 6-00 மணி முதல் 8 00 மணி வரை மேற்படி புத்த கங்கள், அங்கத்தினர்களின் பார்வைக்கு அனுமதிக்கப்படவேண்டும்

11 சங்கத்தின் நடவடிக்கைகள் தலைவர் சங்க நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய நிர்வாகக் குழுவால் மேற்கொள்ளப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையானது பிரிவு/அலுவலகம்/பகுதி இவற்றில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் பொதுவாக பிரதிநிதிகளின் எண்ணிக்கை 100 அங்கத்தினர்களுக்கு ஒரு பிரதிநிதி என்று நிர்ணயிக்கப்படும் தலைவர், மூன்றுக்கு மேற்படாத உபதலைவர்கள் ஒரு பொதுச் செயலாளர், இரண்டு கூட்டு செயலாளர்கள், ஒரு பொருளாளர், மற்றும் 23 பிரதிநிதிகள் ஆகியோர் அனைவரையும், சங்கத்திற்கு ஆண்டு முழுவதும் ஒழுங்காக சந்தா செலுத்திய அங்கத்தினர்கள் நேரடி இரகசியத் தேர்தல் மூலம் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள்

சங்க நிர்வாகிகள் அல்லாத பிற நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு பகுதி பிரிவுகளில் உள்ள அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் எல்லா உறுப்பினர்களாலும் தேர்ந்தெடுக்கப்படும் சங்க நிர்வாகிகளைத் தவிர பிற நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகளை நிர்ணயிக்க, சங்க நிர்வாகக் குழுவிற்கு விதிகளை வகுக்க உரிமை உண்டு. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு பிரதிநிதிகள் அனைவரும், அடுத்த தேர்தல் வரை பொறுப்பில் இருப்பார்கள் இடையில் ஏற்படக்கூடிய காலி இடைகளை நிர்வாகக் குழு நிரப்பலாம். இவ்வாறு நிர்வாகக் குழுவால் நியமிக்கப்பட்டவர்கள் அடுத்த தேர்தல் வரை செயல்பட உரிமையுண்டு நிர்வாகக் குழு அங்கத்தினர்கள் எருவம் 18 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் கூடாது நிர்வாகக் குழுவானது, எதிர்பார்க்காமல் ஏற்படும் காரணங்களான வேலை நிறுத்தம் கதவடைப்பு, தேர்தல் நடந்தக்கூடாது என்று சிவில் நீதி மன்றத்தின் தடை, மற்றும் தேர்தல் நடத்த இயலாத நிலையைத் தோற்றுவிக்கும் காரணங்கள் இவற்றின் காரணமாக தேர்தலை ஒத்திவைக்கலாம். ஆனால் பொது உறுப்பினர் கூட்டத்தால் அம்முடிவு பின்னர் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

12 சங்க நிர்வாகக் குழு மாதத்திற்கொரு முறையாவது கூட்டப்பட வேண்டும் தலைவர் தேவை என்று கருதுகிற காலங்களில் நிர்வாகக் குழுவின் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்படலாம் நிர்வாகக் குழுவின் மூன்றில் ஒரு பகுதி அங்கத்தினர் கையொப்பமிட்டு அளித்த நிர்வாகக் குழு வேண்டுகோளின் அடிப்படையில் தலைவர் அந்தகைய வேண்டுகோள் கிடைத்த பத்து நாட்களுக்குள் நிர்வாகக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவார். நிர்வாகக் குழு கூட்டத்திற்கு நிர்வாகக் குழுவின் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர்களாவது வந்திருந்தால்தான் கூட்டத்திற்கு தேவையான எண்ணிக்கையில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் வந்ததாகக் கருதப்படும் நிர்வாகக் குழுக் கூட்டத்திற்கான அறிவிப்பு நிகழ்ச்சிப் பொருள்களையும் குறிப்பிடவேண்டும்

13 அனைத்து கூட்டத்திற்கும், நிர்வாகக் குழுக் கூட்டங்களுக்கும் தலைவர் தலைமை தாங்குவதுடன், ஒழுங்கை பாதுகாத்து அனைத்து குறிப்புக்களிலும் கையொப்பமிடவேண்டும் அதுவல்லாமல் தலைவர் அவசிய மேற்படும்பொழுது விசேஷ பொது உறுப்பினர் கூட்டத்தையோ, நிர்வாகக் குழு கூட்டத்தையோ கூட்டலாம்.

14 உபதலைவர், தலைவருக்கு உதவியாகவும், தலைவரில்லாத நேரங்களில் அவரது பணிகளையும் மேற்கொண்டு செயல் படுவார்.

15. தலைவரும், உபதலைவரால் தலைமை தாங்க இயலாதபோது கூடுகின்ற கூட்டத்திற்கு மற்ற பிரதிநிதிகளில் ஒருவரை தலைவராக அக் கூட்டத்திற்கு நியமிக்கலாம். ஏதவாது ஒரு பிரச்னையைப் பற்றி வாக்கெடுப்பு நடந்தி அதில் சம வாக்குகள் விழும் சமயம் மட்டும்தான் தலைவருக்கு தனது வாக்கோடு தீர்மானிக்கும் வாக்களிக்க உரிமையுண்டு.

16. செயலாளர் எனப்படுவர் பொதுவான மேற்பார்வைப் பொறுப்போடு சங்கத்தின் நடவடிக்கைகளை இயக்குவதோடு கீழ்க்கண்ட பொறுப்புகளும் அவருக்கு உண்டு.

[அ] சங்கம் சார்பாக தொடர்புகள் அனைத்தையும் நடத்துவது.

[ஆ] செயற்குழு கூட்டம், பொதுக்குழு கூட்டம் இவற்றின் நடவடிக்கைகள், குறிப்புகள், தீர்மானங்கள் இவற்றை பதிவு செய்தல்.

(இ) இந்திய தொழிற் சங்ககங்ள் சட்டத்தின் கீழ் தேவைப்படும் புத்தகங்கள், பதிவேடுகள் அனைத்தையும், (கணக்கு வழக்கு சம்பந்தப்பட்டவை நீங்கலாக) நிர்வகிப்பது

(ஈ) சாதாரண கூட்டங்கள், செயற்குழு கூட்டங்கள் இவற்றை கூட்டுவதற்காக தலைவருடன் கலந்தாலோசித்து அறிவிப்பு அறிக்கை, நிகழ்ச்சி நிரலை தயார் செய்வது

(உ) இந்திய தொழிற் சங்க விதியின் கீழ் கோரப்படும் தகவல்கள், நகல்கள் இவற்றை தயாரித்து சமர்ப்பிப்பது.

17 இணைச் செயலாளர் என்பவர் பொதுச் செயலாளருக்கு உறுதுணையாக இருந்து செயல்படுவதுடன் பொதுச் செயலாளரால் இயலாத சமயங்களில் அவருடைய வேலைகளை கவனிப்பார் இவ்விதிகளில் எதுவும் செயலாளரின் உரிமை, செயல் உரிமை இவைகளை மேற்கொள்ள வேறு யாருக்கும் செயலாளர் செயல்படக் கூடிய நிலையில் இருக்கும் பொழுது அளிக்கவில்லை.

18. சங்கத்தின் கணக்கு வழக்குகள் அனைத்தையும் நிர்வகிப்பது சங்கத்திற்கு வரவேண்டிய தொகையை வசூலிப்பது செலவினங்களுக்குரிய ரசீதுகளுக்குண்டான தொகையை வழங்குவது

19 பொதுவாக ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்திற்கு முன்பாக வருடாந்தர பொதுக் குழுக் கூட்டம் கீழ்க்கண்ட காரணங்களுக்காக கூட்டப்பட வேண்டும்

(அ அவ்வருடத்தில் சங்கம் செய்துமுடித்த காரியங்கள் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு வழக்கு முதலியவற்வை பரிசீலிப்பது.

(ஆ) தேர்தல் நடத்த நாளை குறிப்பது

(இ அறிவிப்பு அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் ஏனைய பிரச்சனைகள் காரியங்கள் முதலியவற்றை உரிய முறையில் நடத்துவது தலைவர் தேவை என்று கருதும் சமயம் விசேஷ பொதுக் குழுக் கூட்டத்தை கூட்டுவார் அல்லது மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் பத்தில் ஒரு பங்கு அங்கத்தினர்களின் கையொப்பமிட்ட கோரும் பொதுக் குழுக் கூட்டத்தை கோரிக்கைபெற்ற 20-தினங்களுக்குள் நடத்துவார். பொதுக் குழு கூட்டம் கூடுவதற்கு 15 நாட்கள் முனபாக அங்கத்தினர்களுக்கு கூட்டம் பற்றி தெரிவிக்கப்பட வேண்டும் அந்த அறிக்கையில் என்னன்ன காரணங்களுக்காக கூட்டம் கூட்டப்படுகிறதென்பதையும் தெரிவிகக வேண்டும் அவ்வறிக்கையின் மூலம் கூட்ட நிகழ்ச்சி நிரல் தெரிவிக்கப்படாவிட்டால் கூட்டம் கூட்டபடுவதற்கு 7 நாள் முன்பாகவாவது அறிவிககவேண்டும். பொதுக்குழு கூட்டம் நடைபெற மொத்த அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் கூட்டத்தற்கு வந்து இருககவேணடும்.

20. மாத சந்தா மற்றும் நன்கொடைகள் சங்கத்தின் பொதுக் கணக்கில் அடங்கும் இந்திய தொழிற் சங்க சட்டம் செக்ஷன் 15-ன் கீழ் அடங்கிய செலவினங்கள் அதாவது கீழே கொடுக்கப்பட்டவை மட்டுமே பொது கணக்கிலிருந்து செலவு செய்யப்படலாம

(அ) தொழிற் சங்க நிர்வாக ஊழியர்களின் ஊதியம் இதரபடிகள் மற்றும் செலவினங்கள்.

(ஆ) சங்கத்தின் கணக்கு பரிசீலிக்கும் (Audit) கட்டணம், அன்றாட நிர்வாக செலவுக்கு.

(இ) சங்க உறுப்பினர் பணியாற்றும் தொழிற்சாலை நிர்வாகிக்கும் தொழிலாளர்களுமிடையே ஆன உறவு முறை சம்பந்தப்பட்ட உரிமைகளுக்காகவோ, தொழிற்சங்கம் பற்றிய உரிமைகளைப் பெறவோ, பாதுகாக்கவோ, எழும் வழக்குகளில் பாதுகாப்புக்காக வழக்காடச் செலவிடலாம்.

(ஈ) சங்கத்தின் சார்பாக அல்லது தனிப்பட்ட உறுப்பினர் சார்பாக ஏற்படும் தொழிற் தகராறுகள் இவற்றை நடத்துவது

(உ) தொழிற் தகராறு சார்பான நஷ்டங்கள் ஒரு அங்கத்தினருக்கு ஏற்படும் பொழுது நஷ்டஈடு அளிப்பது

(ஊ) உறுப்பினர்களுக்கோ, அவர்களைச் சார்ந்தவர்களுக்கோ, இறப்பின் பொழுதோ, வயதான காலத்திலோ, நோய்வாய்ப்பட்ட காலத்திலோ விபத்து காலத்திலோ அல்லது வேலை இழப்பு ஏற்படும் பொழுது ஒரு தொகை படியாக அளிப்பது

(எ) உறுப்பினர்கள் உடல் நலமின்றியோ, விபத்துக்குள்ளாகியோ, வேலை இழக்கும் பொழுதோ அதற்கு ஏற்ற முறையில் ஈடு செய்ய காப்பீடு செய்யும் பொறுப்பை மேற்கொள்வது.

(ஏ) கல்வி, சமூக, மத விஷயங்களில் உறுப்பினர்களுக்கு உதவ உறுப்பினர்கள் காலமடையும் சமயங்களில் ஏற்படும கிரியைகளுககு உதவுதல் மதச் சடங்குகளுக்கு உறுப்பினர்களுக்கோ. அவரைச் சார்ந்தவர்களுக்கோ உதவுவது

(ஐ) நிர்வாகத்தையோ, தொழிலாளர்களையோ பாதிக்கக் கூடிய பிரச்சினைகளை விவாதிக்கும் வெளியீடுகளை வெளியிடுதல்.

(ஒ) தொழிலாளரின் நன்மைக்காகவோ, அல்லது வேறு முக்கிய செலவினங்களுக்காகவோ, தொழிற் சங்க பொதுக் கணக்கிலிருந்து அந்த ஆண்டு வசூல் செய்த தொகையும் அடுத்த ஆண்டு ஆரம்பத்தல் வரவு செலவுக் கணக்கில் மொத்த இருப்பாகக் காட்டப்படும் தொகையும் சேர்ந்த தொகையில் நான்குக்கு ஒரு பங்குக்கு மேலாக ஒரு வருடத்தில் செலவிடக்கூடாது இவையல்லாது வேறு ஏதாவது இனங்கள் குறித்து அவ்வப்போது சம்பந்தப்பட்ட அரசாங்கத்தால் வெளியிடப்படும அறிக்கையில் குறிப்பிடப்படும இனங்களுக்கும செலவிடலாம்.

21. தொழிற் சங்கத்திற்கு வரவேண்டிய எல்லா தொகைகளும், ரசீதுகளும் நிர்வாகக்குழு பரிந்துரைக்கும் வங்கியில, வசூலிக்கப்பட்ட

பட்ட தேதியிலிருந்து ஒரு குறுகிய நாட்களுக்குள் (இந்நாட்கள் நிர்வாகக் குழுவால் தீர்மானிக்கப்பட வேண்டும்). சங்கத்தின் பெயரில் செலுத்தி விட வேண்டும். சங்கத்திற்கு வரக்கூடிய எந்த தொகையையும் வங்கியின் கணக்கில் வரவு வைக்காமல் பயன்படுத்தவோ, செலவிடவோ கூடாது. மேற்படி வங்கியிலிருந்து பணத்தை எடுக்க தலைவரும், பொருளாளரும் சேர்ந்து கூட்டு கையெழுத்திட்டுத்தான் பெறமுடியும் இருப்பினும் பொருளாளர் தன் கையில் எப்பொழுதும் நடைமுறை செலவுக்கு ரூ 500-க்கு மேற்படாமல் வைத்துக்கொள்ளலாம்

22. செயலாளர், அல்லது தலைவர் வழக்கமான அல்லது அவசர செலவிற்காக இரு நிர்வாகக் குழு கூட்டங்களுக்கு இடையே ரூ. 500 செலவிட உரிமை உண்டு நிர்வாகக் குழு ரூ. 1000-க்கு மேற்படாத தனித தனி செலவினங்களுக்கு செலவிட அனுமதியளிக்க உரிமை உண்டு. இவையல்லாத மற்ற செலவுகள் அனைத்தும் பொதுக்குழுவின் அனுமதி பெற்ற பின்னே செலவிடப்படவேண்டும். தவிர்க்கமுடியாத நேரங்களில் முக்கிய காரணங்களுக்காக நிர்வாகக் குழுவின் அனுமதியோடு அதிகத் தொகை செலவு செய்தாலும் அந்தச் செலவு பொதுக் குழு கூட்டத்திற்கு கொண்டு வரப்பட்டு அங்கீகரிக்கப்படவேண்டும். செயலாளரும் பொருளாளரும் கையொப்பமிட்ட பற்றுச் சீட்டுகளின் பேரில் மட்டுமே பணம் வழங்கப் படவேண்டும்.

23 இந்திய தொழிற் சங்க சட்ட பதினேருவது விதியின் கீழ். உறுப்பினர்களுடைய சமூக அரசியல் அந்தஸ்தை உயர்த்தவும் ஒரு தனி நிதியை நிர்வாகக்குழு ஏற்படுத்தலாம்.

24. இந்திய தொழிற்சங்க விதிகளின் கீழ் சங்கத்தின் வரவு செலவு கணக்குகள் ஆண்டு தோறும் தொழிற்சங்க சட்டத்தின்படி தகுதி உடைய தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படவேண்டும் நிர்வாகக் குழு கணக்குகள் தணிக்கை செய்யப்படும்படி கவனிப்பது அவர்களின் கடமையாகும்.

25. சங்கத்தின் சட்ட விதிகளில் திருத்தமோ, மாற்றமோ, நீக்கமோ செய்யப்படலாம் அவை அதிகபட்ச அங்கத்தினர்கள் கூடிய பொதுக்குழு கூட்டத்தில் அந்த திருத்தத்திற்கோ, மாற்றத்திற்கோ, நீக்கத்திற்கோ, ஆதரவாக கிடைக்ககூடிய வாக்குகளின் அடிப்படையில் முடிவெடுக்கப்பட வேண்டும்

26. சங்கத்தை கலைக்க வேண்டுமென்றல் சங்கத்தின் மொத்த அங்கத்தினர்களின் முக்கால் பங்கு [75%] அங்கத்தினர்கள் கூடிய பொதுக் குழு கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தால் கலைக்கப்படலாம்.

PART — 10

# Rules and Regulations of the Union

(ENGLISH)

# ASHOK LEYLAND EMPLOYEES' UNION

Regd. No. 2286

**Rules and Regulations of the Union.**
(As amended upto December 9th of 1977)

1. The name of the Union shall be "ASHOK LEYLAND EMPLOYEES' UNION, MADRAS.

2. The objects of the Union shall be :

(a) To regulate the relations between the members and their employers,

(b) to render help to the members by constitutional methods,

(c) to secure to them fair conditions of life and work,

(d) to endeavour to redress their grievances,

(e) to provide relief to members against sickness, old age, unemployment and death,

(f) to endeavour to settle disputes between the members and their employers,

(g) to promote the civic and political interests of members and their employers,

(h) to co-operate and federate with organisations if workers have similar objects.

3. Any workmen who is employed in the ASHOK LEYLAND LTD and who is not below the age of 18 years shall be eligible to become an ordinary member of the Union provided he agrees to abide by the rules and bye-laws that may be made by the union from time to time.

No workmen who is a member of any other trade Union functioning in rivalry to the Ashok Leyland Employees Union shall be eligible to become a member unless he resigns his membership from the rival union and he is admitted by a decision of the Executive Committee of the Union.

Any member who enrols himself as a member of the rival union shall cease to be member of this Union.

4. Persons not actually engaged or employed in the industry with which the Union is connected may be admitted as honorary member of the Union for the purpose of serving in the executive of the Union. The number of such honorary member shall not be more than half the member of the members in the executive committee of the Union.

5. Every ordinary member shall pay a monthly subscription of TWO rupee. Any member who fails to pay his subscription for three continuous months shall cease to be a member and shall forefeit his clam to any benefits from the Union form the date of ceasing to be a member. The executive committee may however, restore the membership of such a person if he pays off his arrears of subscription.

6. With reference to the financial position of the Union the executive committee shall decide from timeto time the benefits to be given to to the members. A member shall be entitled to the benefits and if he has paid his subscription to the Union uptodate.

7. (A) Any member other than the members of the Executive Committee found working against the Union's interest shall be romoved from the Union membership or otherwise punished after giving previous intimation about the same and allowing him to explain his action. The action shall be taken by the Executive Committee by passing a suitable resoluion to that effect. The member concerned shall have a right of the general body of the Union.

(B) The president and other office bearers may be removed from their respective posts on a motion of non-confidence signed by at least one third of the members of the union and submitted to the President. A notice of not less than twenty days shall be given to the General body convened for the purpose of considering the motion of non-confidence. The said no confidence will be put to the vote of the members of the union to be cast in a s ecret ballet and shall be decided according to the majority of the votes. in the case of the executive committee who do not hold any posts the motion of

no-confidence shall be signed by at-least one half of the members in the constituency from which the concerned executive member has been elected. The said no-confidence will be put to the vote of the members in the constituency in a secret ballot and shall be decided according to majority of the votes Only members of the Union who have paid the subscription without any arrears shall be entitled to cast their votes upon the said no-confindece motions.

8. No member of the Union employed in an undertaking shall go on strike without having given to his employer within six weeks before striking not less than 14 days previous notice in writing of his intention to do so. No notice of strike shall be given by any member of the Union to his employer unless in a ballot conducted for the purpose, two third of the total member of the Union employed in the undertaking have voted in favour of strike.

9. If a member goes on strike without the sanction of the Union he shall not be entitled to any benefits from the Union from the date of/on which he has so struck work. This is in addition to any other penalty which may be imposed on him under rule 7.

10. A register of member's account books and other prescribed registers and books shall be kept at the registered office of the Union and propely maintained by the officers responsible The registers and books shall be opened to inspection by any office or members of the Union, at the registered office on all working days during the hours 6 p m to 8 p m when the registered office is open.

11. The affairs of the Union shall be conducted by an Executive Committee consisting of a president, office bearers and representatives. The number of representatives to be eleeted shall be fixed taking into consideration the number of members of the Union in the shop section/group of sections etc. Normally the number of representatives shall be fixed at the rate of not more than one for 100 members. The President, not more than three vice-presidents a General Secretary, two Joint Secretaries a Treasurer and twenty three representatives shall be elected on the

basis of direct secret ballot, in which all members of the Union, who have paid subscription for the whole of the proceeding year shall be eligible to cast their votes. Other members of the executive committee not holding any post shall be elected from each shop/section or group of sections as the case may be. The executive committee shall make suitable rules to decide the respective constituencies for election of executive committee members other than those office bearers who are elected by all the members. The executive committee members so elected shall hold office till the next election. Interim vacancies in the executive committee shall be filled by the committee by co-option and the co-opted members shall hold office till the next election. None of the members of the Executive Committee shall be below the age of 18 years. The executive committee may postpone the annual elections due to extraordinary reasons such as strikes lockout, injunction by civil court restraining election, or any other reason making it impossible to hold elections subject to ratification of the General Body.

12. Meeting of the Executive Committee shall be held atleast once a month. Special meetings of the Committee shall be held whenever the President shall consider it necessary On receipt of a requisition from one third of the members of the committee, the President shall convene a special meeting of the committee within ten days of the receipt of the requisition. The presence of one-third of the number of members of the committee shall be necessary to constitute a quorum of a meeting of the committee. The notice shall specify the subjects to be discussed.

13. The president shall preside over all the meetings of the the Union and of its executive, preserve order and sign all minutes. He shall have power to convene special meeting of the Union and of the Executive Committee whenever he considers it necessary

14. The Vice-President shall assist the president and shall act for him in his absence.

15. When the president and the vice presibent are not present, the meeting shall elect a chairman from among the

members present, the Chairman of the meeting shall have a casting vote only in the case of equality of votes on any question.

16. When the Secretary shall exe cise general supervision and control over the affairs of the Union. He shall be responsible for :

(a) conducting all correspondence on behalf of the Union;

(b) recording the minutes of the meetings of the committee and of the general body ;

(c) maintain the register of members and other books and registers (other than account books and registers) prescribed by or under the Indian Tader Unions Act ;

(d) Convening in consultations with the president, ordinary meeting of the Union and of the Executive Committee and issuing notices and Agenda there of and ;

(e) Submitting the statements and othere documents required to be submitted *by* or under the Indian Trade Unions Act.

17. The Joint Secretaries shall assist the General Secretary in his work and act for him in his absence. Nothing in these rules however, shall be deemed to confer on any other person, the power and right to exercise the powers of the Secretary so long as the Secretary himself is able to perform them.

18. The treasurer shall maintain the accounts of the Union, collect amounts due, issue receipts therefor and make payments onproper vouchers.

19. There shall be held once in a year normally before April an Annual General meeting of all the members of the Union to Transact the follwing business :

(a) To adopt the report of the work done by the Union and consider the audited statements of accounts of the previous year.

(b) To fix the date for the election.

(c) To transact the such other business as may be brought forward after notice in the prescribed manner.

The President may call for a special meeting of the Union whenever he thinks it necessary, and shall do so on a requisition signed by one-tenth of the total number of members of the Union. Such meetings shall be held within twenty days of the receipt of the requisition. Atleast 15 dady notice shall be given to the members for a meeting ofme mbers of the Union The notice shall specify the subjects to be discussed. Seven days notice shall be given tc members of any subjects to be discussed at a meeting of the members of the Union if that subject has not been mentioned in the notice of the meeting itself. The presence of atleast one-third of the total number of members of the Union shall be necessary to constitute a quoram at a meeting of the Unicn.

20. Subscription from members and donations shall form the General Fund of the Union. The General Fund of theUnion shall be spent only on such of these objects of the Union as consistant with the Section 15 of the Indian Trade Unions Act, reproduced below :

(a) The payment of salaries. allowances and expenses to officers of the trade union.

(b) The payment of expenses of the administration of the Trade Union including audit of accounts of the general funds of trade Union.

(c) The prosecution of defence of any legal proceedings to which the trade union or any member thereof is a party when such prosecution or defence is undertaken for the purpose of securing or protecting any rights of the trade union as such or any rights arising out of the relations of any member with his employer or with a persons when the member employees.

(d) The conduct of the trade dispute on behalf of the trade union or any member thereof.

(e) The compensation of members for loss arising out of trade dispute.

(f) Allowances to members or their dependents on account of death old age, sickness, accidents or unemployment of such members.

(g) The issue of or the undertaking of the liability under policies of assurance on the lives of members, or under policies insuring members against sickness, accident or unemployment.

(h) The provision of educational, social or religious benefits for members (including the payment of expenses for funeral or religious ceremonies for deceased members or for the dependents of members).

(i) The up-keep of a periodical published mainly for the purposes of discussing questions affecting employers or workmen as such

(J) The payment in furtherence of any of the objects on which general funds of the trade union may be spentof contributions to any cause intendedto benefit workmen in general provided that the expenditure in respect of the such contributions in any financialyear shall not at any time during the year be excess of one fourth of the combined total of the gross income which has upto that time accrued to the general funds of the trade Union during that year and the balance at the credit of the funds at the commencement of that year end

(k) Subject to any conditions contained in the notitication any other subject notified by the appropriate Government in the official gazette.

21. All receipts of the Union shall be deposi ed in the name of the Union in any Bank selected by the Executive Committee and within a reasonable time after collection as may be fixed by the committee. Receipts should not be utilised or spent directly before depositing in a bank accounts required by the Union for meeting any expenditure should be drawn from the bank account only on the joint signatures of president and Treasurer of the Union The treasurer may however be authroised to retain a sum not exceeding Rs. 500/- for meeting of the runni ng expenses of the Union.

22. The secretary or president may authorise routine or urgent expenditure not exceeding Rs. 500/- per item of expendi- ture between two meetings of the executive committee. The

executive committee may authorise expenditure not exceeding Rs. 1000/- per item of expenditure. All other expenditure requires the prior sanction of the General body. Under extra-ordinary circumstances for special reasons the executive commitee shall have power to spend, exceeding the specified limit but such expenditure shall be subject to ratification by the General body. The funds of the Union shall be disbursed on vouchers signed by the Secretary and the Treasurer.

23. The Executive committee may constitute a separate fund for the promotion of the civic and political interest of the members subject to the provision of section 16 of the Indian Trade Unions Act.

24. The accounts of the union shall be audited once a year by an auditor possessing the qualifications prescribed under the Indian Trade Unions Act. The responsbility shall be upon the Executive Committee to see that the accounts are so audited.

25. The rules of the Union may be amended, varied or rescinded by a majority of members assembled at a meeting of the General body, voting in favour of an amendment.

26. The union shall be dissolved if at least three fourths of the number of the members present at a General Body meeting of the Union record their votes in favour of dissolution.